சுருக்கம்

பள்ளிகள் – பள்ளிகளில் தொகுப்பூதியத்தில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு 1.6.2006 முதல் காலமுறை ஊதியம் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வி (வரவு செலவு – 2) துறை

அரசாணை (நிலை) எண். 99 நாள் 27–06–2006

படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண்.100/பள்ளிக் கல்வி (பட்ஜெட்) துறை நாள் 27.6.03
2. அரசு நே.மு.க.45241/பிடி & எஸ் ஐ (எஸ்பி II)/ 2006, திட்டம், வளர்ச்சி (ம) சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 25.5.06
3. பள்ளிக் கல்வி இயக்குநர் கடித எண்.45868/அ1/2006 நாள் 6.6.2006

ஆணை

மேலே 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில் அனைத்து வகைப் பள்ளிகளிலும் அந்தந்த வகை ஆசிரியர் பணியிடங்களில் அவ்வப்போது நிரந்தரமாகக் காலி ஏற்படும்போது, அத்தகைய பணியிடங்களானது இளநிலை ஆசிரியர் பணியிடங்களாக (அதாவது, இளநிலை இடைநிலை ஆசிரியர், இளநிலை பட்டதாரி ஆசிரியர், இளநிலை முதுகலை ஆசிரியர்) கருதப்பட்டு கீழ்க்கண்டவாறு தொகுப்பூதியத்தில் நிரப்ப அரசு ஆணையிட்டது.

| வரிசை எண் | ஆசிரியர் பணியிட வகை | வழங்கப்படவுள்ள தொகுப்பு ஊதியம் மாதம் ஒன்றுக்கு |
|---|---|---|
| 1 | இளநிலை இடைநிலை ஆசிரியர் (உடற் கல்வி ஆசிரியர், சிறப்பாசிரியர் உட்பட) | ரூ.3000/– (நர்சரி, மாண்டிசோரி மற்றும் கிண்டர் கார்டன் போன்ற இளநிலை ஆசிரியர்களுக்கு ரூ.2500) |
| 2 | இளநிலை பட்டதாரி ஆசிரியர் (மொழி ஆசிரியர் உள்பட) | ரூ.4000/– |
| 3 | இளநிலை முதுகலை ஆசிரியர் | ரூ.4500/– |

மேலும், அவ்வாணையில் இவ்வாறு தொகுப்பூதியத்தில் நிரப்பப்படும்போது, இனி ஆசிரியர் பணியிடங்களில் முறையான ஊதிய விகிதத்தில் நேரடி நியமனம் இருக்காது என்றும் பதவி உயர்வில் மட்டும் முறையான ஊதிய விகிதத்தில் நியமனம் செய்யப்படும் என்றும் இளநிலை ஆசிரியர் காலிப் பணியிடங்களில் தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்படுபவர்கள் ஐந்து ஆண்டு கால நிரந்தர பணி நிறைவுக்குப்பின் தகுதி, திறமை மற்றும் பணிமூப்பு போன்றவைகளுக்குட்பட்டு முறையான ஊதிய விகிதத்தில் நியமனம் செய்யப்படுவர் என்றும் அவ்வாறு நியமனம் செய்யும்போது அவர்கள் வகிக்கும்

பணியிடமானது தானாக முறையான பணியிடமாக தரம் உயர்த்தப்பட்டதாகக் கருதப்படும் என்றும் முறையான ஊதிய விகிதத்தில் நியமனம் செய்த பின்னர் அவர்களது தகுதிகாண் பருவமானது மூன்றாண்டு காலத்திற்குள் இரண்டாண்டு காலமாக இருக்கும் என்றும் ஆணையிடப்பட்டது.

2. அரசுப் பள்ளிகளில் தற்போது ஒப்பந்த முறையில் தொகுப்பூதியம் பெற்று பணியாற்றும் ஆசிரியர்களுக்கு இனி ஒப்பந்த முறை மாற்றப்பட்டு காலமுறை ஊதியம் வழங்கலாம் என்றும் அரசுப் பள்ளிகளில் உள்ள அனைத்துக் காலிப்பணியிடங்களும் காலமுறை ஊதிய அடிப்படையில் நிரப்பலாம் என்றும் அரசு முடிவெடுத்துள்ளது.

3. அதற்கிணங்க 2003 – 2004 ஆம் ஆண்டிலிருந்து இடைநிலைதரத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஒப்பந்த முறையில் தொகுப்பூதியம் பெற்று பணியாற்றும் ஆசிரியர்களுக்கு 1.6.2006 முதல் காலமுறை ஊதியம் வழங்கப்படும் எனவும். இனி வருங்காலங்களில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் காலிப் பணியிடங்களை நிரப்பும் போது காலமுறை ஊதிய அடிப்படையில் நிரப்பப்படும் எனவும் அரசு ஆணையிடுகிறது.

4. இச்செலவினத்திற்கான நிதி ஒதுக்கீடு திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்திய மதிப்பீடு 2006–2007ல் மேற் கொள்ளப்படும். இதனை எதிர்நோக்கி சார்ந்த பட்டியல்கள் உரிய அலுவலர்களால் தாக்கல் செய்யப்படும் பொழுது, அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில் அவைகளை அனுமதிக்குமாறு சார்நிலை கருவூலம், கருவூலம் மற்றும் சம்பளக் கணக்கு அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். திருத்திய மதிப்பீடு/ இறுதி திருத்திய மதிப்பீடு 2006–2007ல் இச்செலவினத்தைச் சேர்ப்பதற்கான உரிய கருத்துருவினை அரசுக்கு தவறாது அனுப்பிட தொடக்கக் கல்வி இயக்குநர் மற்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

5. இவ்வாணை நிதித்துறை அ.சா.கு.எண். 2018/FS/P/06 நாள். 27–6–2006ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதி ஒதுக்க பேரேட்டு எண் 185.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம். குற்றாலிங்கம்,
அரசுச் செயலாளர்,

பெறுநர்

தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை – 6
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை – 6
ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர், சென்னை–6
உறுப்பினர் – செயலர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை – 6
மாநில திட்ட இயக்குநர்,
அனைவருக்கும் கல்வித்திட்டம், சென்னை –6

பள்ளிக் கல்வி (ஜி, எச்எஸ், எம் மற்றும் எக்ஸ் பிரிவுகள்) துறை, சென்னை – 9
(உரிய பணிவிதிகளுக்குத் திருத்தம் வெளியிட)
பள்ளிக் கல்வி துறையின் அனைத்து பிரிவுகளுக்கும்.

நகல்
நிதித்துறை (கல்வி–II), சென்னை – 9
நிதித்துறை (சிஎம்பிசி), சென்னை – 9
நிதித்துறை (வரவு செலவு பொது–II), சென்னை–9

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை – 9
சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, சென்னை –9
பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை –9
சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, சென்னை – 9
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை –5
மிகவும் பிற்பட்டோர் மற்றும் சீர்மரபினர் துறை இயக்குநர், சென்னை –5.
முதன்மை வனத்துறை பாதுகாவலர், சென்னை – 15
செய்தி மற்றும் விளம்பரத்துறை இயக்குநர், சென்னை – 9
நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு பள்ளி கல்வி அமைச்சர் அலுவலகம். சென்னை –9
நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு நிதி அமைச்சர் அலுவலகம். சென்னை – 9.
நேர்முக உதவியாளர் ,
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம். சென்னை – 9
பள்ளிக் கல்வி செயலரின் தனிச்செயலர், சென்னை – 9

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

சுருக்கம்

பள்ளிகள் – பள்ளிகளில் தொகுப்பூதியத்தில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு 1.6.2006 முதல் காலமுறை ஊதியம் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வி (வரவு செலவு – 2) துறை

அரசாணை (நிலை) எண். 99

நாள் 27–06–2006

படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண்.100/பள்ளிக் கல்வி (பட்ஜெட்) துறை நாள் 27.6.03
2. அரசு நே.மு.க.45241/பிடி & எஸ் ஐ (எஸ்பி II)/ 2006, திட்டம், வளர்ச்சி (ம) சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 25.5.06
3. பள்ளிக் கல்வி இயக்குநர் கடித எண்.45888/அ1/2006 நாள் 6.6.2006

ஆணை:

மேலே 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில் அனைத்து வகைப் பள்ளிகளிலும் அவ்வப்போது நிரந்தரமாகக் காலி அந்தந்த வகை ஆசிரியர் பணியிடங்களில் ஏற்படும்போது, அத்தகைய பணியிடங்களானது இளநிலை ஆசிரியர் பணியிடங்களாக (அதாவது, இளநிலை இடைநிலை ஆசிரியர், இளநிலை பட்டதாரி ஆசிரியர், இளநிலை முதுகலை ஆசிரியர்) கருதப்பட்டு கீழ்கண்டவாறு தொகுப்பூதியத்தில் நிரப்ப ஆணையிட்டது.

| வரிசை எண். | ஆசிரியர் பணியிட வகை | வழங்கப்படவுள்ள தொகுப்பு ஊதியம் மாதம் ஒன்றுக்கு |
|---|---|---|
| 1 | இளநிலை இடைநிலை ஆசிரியர் (உடற் கல்வி ஆசிரியர், சிறப்பாசிரியர் உட்பட) | ரூ.3000/– (நர்சரி, மாண்டிசோரி மற்றும் கிண்டர் கார்டன் போன்ற இளநிலை ஆசிரியர்களுக்கு ரூ.2500) |
| 2 | இளநிலை பட்டதாரி ஆசிரியர் (மொழி ஆசிரியர் உட்பட) | ரூ.4000/– |
| 3 | இளநிலை முதுகலை ஆசிரியர் | ரூ.4500/– |

மேலும், அவ்வாணையில் இவ்வாறு தொகுப்பூதியத்தில் நிரப்பப்படும்போது, இனி ஆசிரியர் பணியிடங்களில் முறையான ஊதிய விகிதத்தில் நேரடி நியமனம் இருக்காது என்றும் பதவி உயர்வில் மட்டும் முறையான ஊதிய விகிதத்தில் நியமனம் செய்யப்படும் என்றும் இளநிலை ஆசிரியர் காலிப் பணியிடங்களில் தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்படுபவர்கள் ஐந்து ஆண்டு கால நிரந்தர பணி நிறைவுக்குப்பின் தகுதி, திறமை மற்றும் பணிமூப்பு போன்றவைகளுக்குட்பட்டு முறையான ஊதிய விகிதத்தில் நியமனம் செய்யப்படுவர் என்றும் அவ்வாறு நியமனம் செய்யும்போது அவர்கள் வகிக்கும்

பணியிடமானது தானாக முறையான பணியிடமாக தரம் உயர்த்தப்பட்டதாகக் கருதப்படும் என்றும் முறையான ஊதிய விகிதத்தில் நியமனம் செய்த பின்னர் அவர்களது தகுதிகாண் பருவமானது மூன்றாண்டு காலத்திற்குள் இரண்டாண்டு காலமாக இருக்கும் என்றும் ஆணையிடப்பட்டது.

2. அரசுப் பள்ளிகளில் தற்போது ஒப்பந்த முறையில் தொகுப்பூதியம் பெற்று பணியாற்றும் ஆசிரியர்களுக்கு இனி ஒப்பந்த முறை மாற்றப்பட்டு காலமுறை ஊதியம் வழங்கலாம் என்றும் அரசுப் பள்ளிகளில் உள்ள அனைத்துக் காலியிடங்களும் காலமுறை ஊதிய அடிப்படையில் நிரப்பலாம் என்றும் அரசு முடிவெடுத்துள்ளது.

3. அதற்கிணங்க 2003 - 2004 ஆம் ஆண்டிலிருந்து இளநிலைதரத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஒப்பந்த முறையில் தொகுப்பூதியம் பெற்று பணியாற்றும் ஆசிரியர்களுக்கு 1.6.2006 முதல் காலமுறை ஊதியம் வழங்கப்படும் எனவும், இனி வருங்காலங்களில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் காலிப் பணியிடங்களை நிரப்பும் போது காலமுறை ஊதிய அடிப்படையில் நிரப்பப்படும் எனவும் அரசு ஆணையிடுகிறது.

4. இச்செலவினத்திற்கான நிதியொதுக்கீடு திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்திய மதிப்பீடு 2006-2007ல் மேற் கொள்ளப்படும். இதனை எதிர்நோக்கி சார்ந்த பட்டியல்கள் உரிய அலுவலர்களால் தாக்கல் செய்யப்படும் பொழுது, அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில் அவைகளை அனுமதிக்குமாறு சார்நிலை கருவூலம், கருவூலம் மற்றும் சம்பளக் கணக்கு அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். திருத்திய மதிப்பீடு/ இறுதி திருத்திய மதிப்பீடு 2006-2007ல் இச்செலவினத்தைச் சேர்ப்பதற்கான உரிய கருத்துருவினை அரசுக்கு தவறாது அனுப்பிட தொடக்கக் கல்வி இயக்குநர் மற்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

5. இவ்வாணை நிதித்துறை அ.சா.குறிப்பு எண். 2018/FS/P/06 நாள். 27-6-2006ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதி ஒதுக்க பேரேட்டு எண் 185.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம். குற்றாலிங்கம்,
அரசுச் செயலாளர்,

பெறுநர்

தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை - 6
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை -6
ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர், சென்னை-6
உறுப்பினர் - செயலர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை - 6
மாநில திட்ட இயக்குநர்,
அனைவருக்கும் கல்வித்திட்டம், சென்னை -6

பள்ளிக் கல்வி (ஜி, எச்எஸ், எம் மற்றும் எக்ஸ் பிரிவுகள்) துறை, சென்னை – 9
(உரிய பணிவிதிகளுக்குத் திருத்தம் வெளியிட)
பள்ளிக் கல்வி துறையின் அனைத்து பிரிவுகளுக்கும்.

நகல்
நிதித்துறை (கல்வி–II), சென்னை – 9
நிதித்துறை (சிஎம்பிசி), சென்னை – 9
நிதித்துறை (வரவு செலவு பொது–II). சென்னை–9

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை – 9
சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, சென்னை –9
பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை –9
சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, சென்னை – 9
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை –5
மிகவும் பிற்பட்டோர் மற்றும் சீர்மரபினர் துறை இயக்குநர், சென்னை –5.
முதன்மை வனத்துறை பாதுகாவலர், சென்னை – 15
கருவூலக்கணக்கு ஆணையர்,
எண்.1, ஜீனிஸ் சாலை, பனகல் கட்டிடம்
சைதாப்பேட்டை, சென்னை – 15
சம்பளக் கணக்கு அலுவலர்,
சென்னை – 5 /35/ 79
சம்பளக் கணக்கு அலுவலர்,
மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்.
செய்தி மற்றும் விளம்பரத்துறை இயக்குநர், சென்னை – 9
நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு பள்ளி கல்வி அமைச்சர் அலுவலகம், சென்னை –9
நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு நிதி அமைச்சர் அலுவலகம், சென்னை – 9
நேர்முக உதவியாளர் ,
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9
பள்ளிக் கல்வி செயலரின் தனிச்செயலர், சென்னை – 9

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

அரசு சார்புச் செயலாளர்.